ராகவோ, முஸ்லீமாகவோ மாறியிருக்கிறார்கள். ஆனால் ஒரு முஸ்லீமோ கிறிஸ்தவரோ இந்து ஆனதாகத் தெரியவில்லை. ஆகையால் தயவு செய்து எதிர்க் கட்சித் தலைவர் அவர்களையும் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன். இந்து மதத்தில் எல்லோரும் வந்து சேருகிற அளவில் வாய்ப்பைத் தந்து நல்ல முறையில் பயன் அளிப்பதற்கு இந்தச் சட்டம் சரியான முறையில் பயன் தரும் என்று கருதி இந்தச் சட்டத்தை ஆதரிக்கிறேன்.

DEPUTY CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 45 of 1970), as passed by the Assembly, be passed."

The motion was put and carried and the Bill was passed.

(2) ***The Tamil Nadu (Occupants of Kudiyiruppu protection from Eviction) Amenment Bill, 1970 (L. A. Bill No. 43 of 1970)***

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move—

"That the Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill,* 1970 (L.A. Bill No. 43 of 1970), as passed by the Assembly, be taken into consideration."

Under section 1 (3) of the Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Act, 1961, that Act would remain in force for a period of 9 years from the date of its commencement, *i.e*, up to 29th November 1970.

The Act gives protection from evictionfor persons occupying Kudiyiruppu. Pending enactment of a comprehensive tenancy legislation, it is considered that the life of the Act should be extended for a further period of three years. The Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Ordinance, 1970 was promulgated by the Governor for extending the life of the Act for a further period of three years from 29th November, 1970.

The present Bill seeks to replace the said Ordinance.

Sir, I request the House to accept the motion.

DEPUTY CHAIRMAN : Motion moved—

"That the Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1970 (L.A. Bill No. 43 of 1970), as passed by the Assembly, be taken into consideration."

---

*Printed as Appendix IV.

2nd December 1970]

*தவத்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிகர்—குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தக் குடியிருப்பவர்கள் பாதுகாப்பு மசோதாவை, நான் மனப்பூர்வமாக அதுவும் கால நீட்டிப்பு அளிப்பதை வரவேற்று அதே நேரத்தில் பல ஆண்டுகளாக குடியிருப்போருடைய மனைப் பிரச்னையைக் கூடத் தீர்க்காமல் நம்முடைய நாடு விடுதலை பெற்று 23 ஆண்டுகள் கடந்துவிட்டன என்பதை எண்ணும்பொழுது வருத்தம் ஏற்படுகிறது. கீழ்வெண்மணியில் அந்தக் கொடிய சம்பவம் நடந்தபோது, அறிஞர் அண்ணா அவர்கள் அமைச்சர் ஒருவரை அனுப்பி, தக்க ஏற்பாடுகளைச் செய்தார்கள். அப்போது நாம், உடனடியாக அங்கே குடியிருப்பவர்கள் யாரையும் வெளியேற்றாதபடி, தக்க பாதுகாப்புச் செய்தால் மட்டும் போதாது, முக்கியமான காரியங்களுக்காக அவசரச் சட்டம் கொண்டுவருவதைப் போல, யார் யார் எந்தெந்த மனைகளில் குடியிருக்கிறார்களோ அவர்களுக்கு உரிமையாக்குகிற வகையில் ஒரு சட்டம் கொண்டுவந்து அந்தச் சட்டம் வந்த நாள் முதல் அவர்கள் குடியிருக்கும் மனைக்கு அவர்கள் உரிமை உடையவர்கள் என்றும், ஏற்கெனவே சட்ட பூர்வமான உரிமை பெற்றவர்கள் இருந்தால், அவர்கள் தங்களுடைய உரிமையை நிரூபணம் செய்து காட்டி அரசினிடம் இழப்புத் தொகை பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கூறினோம். குடியிருப்பு மனைச் சிக்கலில் நாடு முழுவதும் தழுவிய நிலையில் பரிகாரம் காண வேண்டுமென்று கேட்டுக் கொண்டோம். இந்த மசோதா காலம் நீட்டிக்கப்படும் வகையில் இருப்பதற்காக வரவேற்றாலும், 1961 க்குப் பிறகு அண்மைக் காலம் வரையில் இருக்கிற நடைமுறையை எண்ணிப் பார்த்து, அரசு பல முன்னேற்றத் திட்டங்களைச் செயல்படுத்துவது போல, குடியிருப்புப் பிரச்னையையும் தீர்க்க முன்வர வேண்டும். பின் தங்கியவர்கள், அரிஜனங்கள் குடியிருப்புக்களுக்காக ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களில் அவர்கள் குடியிருக்க முடியாமல் நெருக்கடிகள் ஏற்படுகின்றன. அவசர நெருக்கடி காரணமாக காலம் நீடித்தாலும், தமிழ் நாடு முழுவதும் நமது அரசு சில முன்னேற்ற வேலைகளுக்கு எல்லை கட்டி நிறைவேற்றி வைப்பதைப்போல, ஒரு கால வரையறையை இதற்கு ஏற்படுத்த வேண்டும். தஞ்சை மாவட்டத்தில் பெரிய நெருக்கடியாக இருக்கிறது. நினைத்தபோது எல்லாம் குடியிருப்பைவிட்டு வெளியேற்றுகிறார்கள். அவர்களைப் பாதுகாக்க நிரந்தரமான பாதுகாப்பை அரசு ஏற்பாடு செய்ய முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த மசோதாவை வரவேற்று அமருகிறேன்.

*திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் ஒரு சிறிய சட்டமாக இருந்தாலும், மிக முக்கியமான சட்டமாகும். தமிழ் 5-10 p.m.
நாட்டில் ஏராளமானவர்களைப் பாதுகாக்கும் சட்டமாகும். அவ்வளவு நல்ல இச்சட்டம் 9 ஆண்டுகளுக்கு முன்னாலேயே நிறைவேறியும்கூட, இதை நிரந்தரமான ஒரு சட்டமாக்க அரசாங்கம் போதிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை. இந்த 9 ஆண்டுகளில் அரசாங்கம் குடியிருப்பைப் பொறுத்த அளவிலாவது ஒரு தனிச் சட்டம் கொண்டு வந்தாவது அதை நிறைவேற்றியிருக்க முடியும். அதைச் செய்யாதது வருந்தத் தக்கதுதான். இப்போதும்கூட ''காம்ப்ரெஹென்சிவ் லெஜிஸ்லேஷன்'

கொண்டு வருகிறோம் என்று முன்னாலே சொல்லப்பட்டதைப் போலவே சொல்லப்படுகிறது. இதன் காரணமாகவே தாற்காலிகமாக சில வருஷங்களுக்கு மட்டும் இந்தச் சட்டத்திற்கு நீட்டிப்பு கொடுத்தாலே போதும் என்று அப்போது சொன்னார்கள். இப்போது அதே வாசகத்தைத்தான் இந்த அரசாங்கமும் சொல்லிக்கொண்டிருக்கிறது. நாம் ஏற்றுக்கொள்ளும் ''காம்பரெஹென்சிவ் லெஜிஸ்லேஷன்'' வரும்போது வரட்டும். அதுவரை நாம் பொறுத்துக் கொண்டிராமல், எப்படியாவது குடியிருக்கும் நிலங்கள் குடியிருப்பவர்களுக்கே உடனடியாகக் கிடைக்கும்படி, அவர்களுக்குச் சொந்தச் சொத்தாக, கிரயச் சொத்தாகக் கிடைக்க ஏதாவது ஒரு நிரந்தரச் சட்டம் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும். எனவே இந்த அளவிலாவது ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்ற, குறிப்பாக சட்ட அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த மசோதாவைப் பொறுத்தவரை, நான் பரிபூரணமாக ஆதரிக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் நல்ல நோக்கத்தை ஆதரித்து நமது தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களும் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், இது போன்ற பாதுகாப்பு நிரந்தரமாகக் குடியிருப்பவர்களுக்குத் தரப்பட வேண்டும் என்ற கருத்தை இங்கே வலியுறுத்தினார்கள். குடியிருப்வர்களுக்குப் பாதுகாப்பு என்ற அளவில் நாம் இன்றைக்கு இடைக் காலத்தில் இப்படி ஒரு ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம். அதைப் போலவே தனியிடங்களிலே, தனியார் வீடுகளிலே குடியிருப்பவர்களுக்கும் இடைக் காலமாக ஒரு சட்டத்தைத் தொடர்ந்து நீட்டித்திருக்கிறோம். ரெண்ட் கண்ட்ரோல் ஆக்ட் என்ற முறையில். இதன் மூலம் சாதாரணமாகக் காலி இடங்களில் குடியிருப்பவர்களுக்கு, குறிப்பாக விவசாயக் கூலிகளுக்கு, பாதுகாப்பு தரப்படுகிறது. நிரந்தரமாக அங்கே குடியிருப்பவர்களுக்கே அந்த இடத்தைச் சொந்தமாக்க வேண்டும் என்றால், இந்தச் சட்டத்தால் அதைச் செய்ய முடியாது என்பது நமக்கு நன்றாகத் தெரியும். அந்த இடத்தையெல்லாம் நாம் ஆர்ஜிதம் செய்த பிறகு, அவர்களுக்கு அதை உரிமையாக்க வேண்டும். அதை எப்படிச் செய்வது ? எப்போது செய்வது ? அதற்கு எவ்வளவு தொகை தேவை என்பதைப்பற்றி நமது அரசாங்கம் பரிசீலித்து வருகிறது. குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் இந்தப் பிரச்னை மிகவும் தீவிரமான பிரச்னையாக இருக்கிறது. நிலங்கள் சுற்றியிருக்கிற நடு இடத்தில் விவசாயத் தோழர்கள், விவசாயக் கூலிகள் குடியிருக்கிறார்கள் என்பது நமக்கெல்லோருக்கும் தெரியும். அந்த இடத்தையெல்லாம் அவர்களுக்கே உரிமையாக்க அந்த இடத்தை நாம் ஆர்ஜிதம் செய்ய வேண்டும். அதற்கான புள்ளி விவரங்களை இப்போது சேகரித்து வருகிறோம். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், ஓரளவுக்குப் புள்ளி விவரங்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. இதே சட்டம் எல்லா மாவட்டங்களுக்கும் நீட்டிக்கப்பட வேண்டும் என்று ஒரு கோரிக்கையும் இருந்து வருகிறது. அப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்படுமானால், அரசாங்கம் எந்த முறையில் இந்தக் குடியிருப்புப்

பிரச்னையைத் தீர்ப்பது என்பது குறித்து ஆழ்ந்து யோசித்து பரிசீலித்த பிறகுதான், அதற்கு ஒரு முடிவு செய்ய முடியும். நேற்றுகூட நம்முடைய நிலச் சீர்திருத்தச் சட்டங்களை அமுலாக்குவதுபற்றிப் பரிசீலிக்கும்போது, இந்தப் பிரச்னையும் எழுப்பப்பட்டது. நிச்சயமாக பல அரசியல் கட்சித் தலைவர்களையெல்லாம் சேர்த்துத் தான் இந்தப் பிரச்னையை எப்படித் தீர்ப்பது என்பதைப் பரிசீலித்துப் பரிகாரம் காண வேண்டும். திடீரென்று அரசாங்கம் ஒருவருடைய நிலத்தை இன்னொருவருக்குச் சொந்தம் என்று சொல்லிவிட முடியாது. அது சட்டப்படி செல்லாமல் போய்விடும் என்பது நமக்குத் தெரியும். இதற்கு நமக்கு எவ்வளவு பணம் தேவை, எவ்வளவு பணம் கிடைக்கும், முதலில் எந்த எந்த இடங்களில் அமுல்படுத்தலாம் என்று ஆலோசித்த பிறகுதான், நிரந்தரமாக இந்தக் குடியிருப்பவர்களுக்கு ஒரு பரிகாரம் காண்பதுபற்றிச் சிந்திக்கலாம் என்று கூறிக்கொண்டு இப்போது இந்தச் சட்டத்தை 3 ஆண்டுகளுக்கு நீட்டித்துத் தர வேண்டும் என்று கோரும் இம் மசோதாவை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

DEPUTY CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1970 (L.A. Bill No. 43 of 1970), as passed by the Assembly, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 to 3, clause 1, the Long Title and the Enacting Formula were put and carried.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move—

"That the Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1970 (L.A. Bill No. 43 of 1970), as passed by the Assembly, be passed."

DEPUTY CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1970 (L.A. Bill No. 43 of 1970), as passed by the Assembly, be passed."

The motion was put and carried and the Bill was passed.

(3) *The Tamil Nadu Co-operative Societies (Amendment) Bill,* 1970 (*L.A. Bill No.* 27 *of* 1970)

*திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, அவையின் முன்னிருக்கும் இம் மசோதாவின் நோக்கத்தைப்பற்றி மசோதாவிலேயே பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. மேலும் அமைச்சர் அவர்களும் அதுபற்றி விளக்கமாகச் சொன்னார்கள். விவசாயிகள் தாங்கள் பெற விரும்புகிற 3 வித